Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Multiple Choice Question

1. பின்வரும் வினைகளில், எவ்வினையானது காற்றில்லா சூழலில் வறுத்தலைக் (Calcination) குறிப்பிடுகின்றது?
   (a) $2Zn + O_2 \rightarrow 2ZnO$ (b) $2ZnS + 3O_2 \rightarrow 2ZnO + 2SO_2$ (c) $MgCO_3 \rightarrow MgO + CO_2$ (d) (அ) மற்றும் (இ)
2. கார்பனைக் கொண்டு உலோகமாக ஒடுக்க இயலாத உலோக ஆக்ஸைடு _____.
   (a) PbO (b) Al_2O_3 (c) ZnO (d) FeO
3. ஹால் ஹெரோல்ட் செயல்முறையின்படி பிரித்தெடுக்கப்படும் உலோகம் _____.
   (a) Al (b) Ni (c) Cu (d) Zn
4. வுல்ப்ரமைட்(Wolframite) தாதுவை வெள்ளீயக்கல்லில் (tinstone) இருந்து பிரித்தெடுக்கும் முறை _____.
   (a) உருக்குதல் (b) காற்றில்லாச் சூழலில் வறுத்தல் (c) வறுத்தல் (d) மின்காந்தப் பிரிப்பு முறை
5. பின்வருவனவற்றுள் எத்தனின் பிரித்தெடுத்தலின் மின்வேதி முறை பயன்படுகிறது?
   (a) இரும்பு (b) லெட் (c) சோடியம் (d) சில்வர்
6. பின்வருவனவற்றுள் எத்தாதுவினை அடர்ப்பிக்க நுரைமிதப்பு முறை ஒரு சிறந்த முறையாகும்?
   (a) மேக்னடைட் (b) ஹேமடைட் (c) கலீனா (d) கேசிட்டரைட்
7. ZnO விலிருந்து துத்தநாகம் (Zinc) பெறப்படும் முறை _____.
   (a) கார்பன் ஒடுக்கம் (b) வெள்ளியைக் கொண்டு ஒடுக்குதல் (Ag) (c) மின்வேதி செயல்முறை (d) அமிலக் கழுவுதல்
8. எலிங்கம் வரைபடத்தினைக் கருத்திற் கொள்க. பின்வருவனவற்றுள் அலுமினாவை ஒடுக்க எந்த உலோகத்தினைப் பயன்படுத்த முடியும்?
   (a) Fe (b) Cu (c) Mg (d) Zn
9. உலோகவியலில், தாதுக்களை அடர்ப்பிக்க பயன்படுத்தப்படும் முறைகளுள் ஒன்று _____.
   (a) வேதிக்கழுவுதல் (b) வறுத்தல் (c) நுரைமிதப்பு முறை (d) (அ) மற்றும் (இ)
10. மின்னாற்பகுத்தல் முறையில் காப்பரை தூய்மையாக்குவதில், பின்வருவனவற்றுள் எது நேர்மின்வாயாக பயன்படுத்தப்படுகிறது?
    (a) தூயகாப்பர் (b) தூய்மையற்ற காப்பர் (c) கார்பன் தண்டு (d) பிளாட்டினம் மின்வாய்
11. தாதுக்களுடன் உள்ள உலோகத் தன்மையற்ற மாசுகள், பாறைப்பொருட்கள் மற்றும் மண் மாசுகள் ஆகியன _____ என அழைக்கப்படுகின்றது.
    (a) கசடு (b) இளக்கி (c) கனிமக் கழிவு (d) கழிவு
12. கலீனாவில் காணப்படும் மாசு ZnS ன் நுரைக்கும் தன்மையை குறைக்கும் பொருள் _____.
    (a) பைன் எண்ணெய் (b) யூகலிப்டஸ் எண்ணெய் (c) சோடியம் சயனைடு (d) சோடியம் ஈத்தைல் சாந்தேட்
13. தங்கத்தின் தாதுவை அடர்ப்பிக்கும் முறை _____.
    (a) சயனைடு வேதிக் கழுவுதல் (b) அம்மோனியா வேதிக் கழுவுதல் (c) கார வேதிக் கழுவுதல் (d) அமில வேதிக் கழுவுதல்
14. சின்னபார் தாதுவை மெர்க்குரியாக மாற்றும் முறை _____
    (a) உலோகத்தை பயன்படுத்தி ஒடுக்குதல் (b) ஹைட்ரஜனைக் கொண்டு ஒடுக்குதல் (c) கார்பனைக் கொண்டு ஒடுக்குதல் (d) சுய ஒடுக்கம்
15. வாலை வடித்தல் முறை மூலம் தூய்மைப்படுத்தும் உலோகம் _____
    (a) டின் (b) காரீயம் (c) துத்தநாகம் (d) பிஸ்மத்
16. மான்ட் முறை மூலம் தூய்மையாக்கப்படும் உலோகம் எது?
    (a) சிலிக்கன் (b) காப்பர் (c) நிக்கல் (d) துத்தநாகம்
17. சோலார் செல்களின் திறனை அதிகரிக்க பயன்படுவது _____
    (a) பித்தளை (b) துத்தநாக சல்பைடு (c) வார்ப்பிரும்பு (d) தங்க நானோ துகள்கள்
18. பின்வருவனவற்றுள் எது புலத் தூய்மையாக்கல் மூலம் தூய்மையாக்கப்படவில்லை?
    (a) சிலிக்கன் (b) காலியம் (c) சிர்கோனியம் (d) ஜெர்மானியம்
19. நீரேற்ற அலுமினாவை நீரற்ற அலுமினாவாக மாற்றும் முறை _____
    (a) வறுத்தல் (b) உருக்குதல் (c) சுயஒடுக்கம் (d) காற்றில்லா சூழலில் வறுத்தல்
20. தேவைப்படும் உலோகத்தினை அதன் தாதுவிலிருந்து பிரித்தெடுத்தல் உலோகவியல் செயல்முறையை உள்ளடக்கியது எது ?
    (a) தாதுக்களை அடர்ப்பித்தல் (b) பண்படா உலோகத்தைப் பிரித்தெடுத்தல் (c) பண்படா உலோகத்தைத் தூய்மையாக்கல் (d) இவை அனைத்தும்